**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.103/2018**

2025=ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 தரணி வயது 34 த/பெ சம்பத்**

**நேரம் - 12.25**

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு)**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலை செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லிதான் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். 1ம் வாதி சம்பத் என் தந்தை என்றால் சரிதான். என் தந்தை எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு தாக்கல் செய்த 1ம் வாதியான என் தந்தை இறந்து விட்டார் என்றால் சரிதான்.

2. என் தந்தை இறந்த பிறகு இவ்வழக்கின் 2 முதல் 4 வாதிகளாகிய நான், என் அம்மா மற்றும் என் தங்கை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நல்லான் கவுண்டர் என்பவர் என் தந்தை வழி தாத்தா என்றால் சரிதான். பெரியகுழந்தையம்மாள் என் பாட்டி என்றால் சரிதான். நல்லான் கவுண்டர், பெரியகுழந்தையம்மாள் என்பவர்களுக்கு 1ம் வாதியான என் தந்தை மற்றும் 2 பிரதிவாதிகள் மகன்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி ஆறுமுகம் என்பவர் என்னிடம் மற்றும் என் தாய், சகோதரியிடம் கிரையம் பெற்ற நபர் என்றால் சரிதான்.

3. 3ம் பிரதிவாதியான ஆறுமுகம் இவ்வழக்கில் உள்ள அயிட்டம் 7ல் உள்ள சொத்தான சர்வே எண்.94/22 ஐ கிரையம் பெற்றார் என்றால் சரிதான். நான் மற்றும் இவ்வழக்கில் உள்ள 2 மற்றும் 4ம் வாதிகள் சேர்ந்து மேற்படி ஆறுமுகம் என்பவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண்.4479/2022 என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். மேற்படி ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. என் தங்கை வசந்தியின் கணவர் பெயர் சுரேஷ்குமார் என்றால் சரிதான். அவர் திருமணம் முடிந்து ஆரணிபாளையத்தில் உள்ள புதுக்காமூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள முகவரி ஆரணி வட்டம், ஆதனூர் கிராமம், கம்மாளத் தெரு, கதவு எண்.1/120A என்ற முகவரியில் நானும் என் தாயாரும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். ஆரணியில் கம்மாளத் தெரு மற்றும் தச்சர் தெரு இரண்டும் ஒன்று என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.1 , 2ம் பக்கத்தில் எங்களில் 1 லக்கமிட்ட நபரின் கணவரும், 2 மற்றும் 3 லக்கமிட்ட நபர்களின் தகப்பனாருமான சம்பத் என்பவர் பெயரில் மனை வரி பட்டா எண்.138ன் படி பட்டா வாங்கி அது முதல் அவர் அனுபவித்து வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **சாட்சி தன்னிச்சையாக வீடு பாகப்பிரிவினை ஆனது என்று கருதிதான் மேற்படி ஆவணத்தை கிரையம் கொடுத்தோம் என்று கூறினார். 1ம் பிரதிவாதி எங்களிடம் வீடு பாகப்பிரிவினை ஆனது என்று சொல்லியதன் பேரில்தான் அதை விற்று என் தந்தையின் ஈம சடங்குகளை செய்தேன் என்று கூறினார்.**

6. 1ம் பிரதிவாதி மேற்படி விவரமான வீடு பாகப்பிரிவினை ஆனது என்று என்னிடம் சொல்லவில்லை என்றாலும், நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் பக்கம் 5ல் 3ம் பிரதிவாதியான ஆறுமுகத்திற்கு கிராம நத்தம் சர்வே எண்.94/1 பு.சர்வே எண்.94/22ஐ கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் உள்ள ஜக்பந்தி பழனி இடத்திற்கு வடக்கு, சர்வே எண்.94/21 கிருஷ்ணமூர்த்தி இடத்திற்கு கிழக்கு, சர்வே எண்.94/23 உள்ள ராஜி இடத்திற்கு மேற்கு, கம்மாளத் தெருவிற்கு தெற்கு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

7. என் தந்தையின் பாகத்தின் அவர் இறந்த பிறகு நாங்கள் கிரையம் கொடுத்தோம் என்றாலும், அந்த இடத்திற்கு மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதி என் பெரியப்பா கிருஷ்ணமூர்த்தி இடமும், கிழக்கு பக்கம் 2ம் பிரதிவாதி என் சித்தப்பா ராஜி இடம் உள்ளது என்றால் சரிதான். ஒரே வீட்டைதான் 3 பாகமாக பிரித்து தனித் தனி வடக்கு பார்த்தபடி வாசற்படி உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 பாகமும் தட்டை வீடு என்றால் சரிதான். நடுவில் உள்ள தட்டை வீட்டைதான் நாங்கள் ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான்.

8. தட்டை வீட்டைதான் ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுத்தோம் என்றால் பி.வா.சா.ஆ.1ல் ஏன் காலி மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பின்புற தோட்டத்தைதான் காலி மனையாக குறிப்பிட்டுள்ளோம். மேற்படி பி.வா.சா.ஆ.1ல் முன்புறம் தட்டை வீடு, பின்புறம் காலி தோட்டம் என்று

குறிப்பிட்டு ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1ல் மேற்படி விவரங்கள் உள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்து விட்டு கட்டிடம் ஏதுமில்லை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறினார்.

9. பி.வா.சா.ஆ.1ஐ பதிவு செய்த பிறகு பொதுவாக சொத்தில் கட்டிடம் உள்ளதா? அல்லது காலிமனையாக உள்ளதா என்பதை சார்பதிவாளர் ஆய்வு மேற்கொள்வார் என்றாலும், அவ்வாறு சார்பதிவாளர் இடத்தை பார்வையிட்டாரா என்றால் இல்லை. பதிவு செய்யும் போது முத்திரை தாள் கட்டணம் குறைவாக வேண்டும் என்பதற்காக தட்டை வீட்டை மறைத்து காலிமனை என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் பதிவு செய்யும் போது தட்டை வீடாகதான் இருந்தது.

10. 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பி.வா.சா.ஆ.1ல் பக்கம் 8, 9ல் என் தந்தை பெயரில் உள்ள மனை வரி பட்டா வைத்துதான் கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். அதேப்போல்தான் 1ம் பிரதிவாதி மற்றும் 2 பிரதிவாதிக்கு அவர்கள் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாக்களை அவர்கள் தனி தனியாக வாசல்படி வைத்து அனுபவித்து வந்ததன் அடிப்படையில்தான் தனி தனியாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். **சாட்சி தன்னிச்சையாக வீடு மட்டும் 3 பாகமாக பாகப்பிரிவினை செய்யப்பட்டது. நீதிமன்ற கேள்வி - எந்த வருடம் பாகப்பிரிவினை ஆனது என்றால் என் தந்தை உயிருடன் இருக்கும் காலத்திலேயே பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது, ஆகையால் எனக்கு வருடம் சரியாக தெரியாது.**

11. இவ்வழக்கு நிலுவையில் உள்ள போதுதான் நான் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் மேற்படி கிரைய தொகையை வைத்துதான் என் தந்தையின் ஈம சடங்குகளை செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை எந்த வருடம் காலமானார் என்றால் 20.10.2019ம் ஆண்டு காலமானார். என் தந்தை இறந்து 3 வருடம் கழித்துதான் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். கடன் சுமை அதிகமானது என்று சாட்சி தன்னிச்சையாக கூறினார்.

12. 2019ம் ஆண்டு என் தந்தை இறந்தார் என்றாலும், 2022ம் ஆண்டுதான் நான் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றாலும், எவ்வாறு ஈம சடங்கிற்கு மேற்படி பணத்தை நான் செலவு செய்தேன் என்றால் நான் கடன் வாங்கிய பணத்தைதான் கிரையம் கொடுத்த தொகையை வைத்து கடன் அடைத்தேன். மேற்படி விவரங்களை நான் என்னுடைய வாது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் மேற்படி விவரங்களை கூறியுள்ளேன்.

13. தாவா சொத்தான அயிட்டம் 7 என் தந்தை உயிருடன் இருக்கும் காலத்திலேயே பாகப்பிரிவினை செய்யப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டு அதை மறைத்து என் தந்தை பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது**

**நேரம் - 1.15**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court, Arni